# தொல்காப்பியத்தில் இசைச் செய்திகள்

திருமதி.கி.கருணா

**ஆய்வுச்சுருக்கம்**

*சிறப்பு மிகு கலைகளுள் ஒன்றான இசைக்கலை பற்றிய பல செய்திகள் பழந்தமிழர் இலக்கியங்களில் காணப்படுகின்றன. இத்தகைய கலைகளின் வரிசையில் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலில் உள்ள இசை பற்றிய பல செய்திகள் இசையின் பழமையையும் முக்கியத்துவத்தினையும் விளக்குவதாக அமைகின்றன. அவ்வகையில், இவை யாவும் இவ்வாய்வுக் கட்டுரையில் இசையின் ஒழுங்குமுறை, நிலங்களுக்குரிய பண்வகைகள். வண்ணங்களின் வகைகள். யாப்பு வகைகளுக்குரிய ஓசைகள் முதலான பதினான்கு இசைத்தலைப்புகளின் வழியாக விரிவாக நோக்கப்படுகின்றன.*

பண்டைக் காலத்தில் மக்கள் குழுக்களாக வாழ்ந்ததால் காலப்போக்கில் இயற்கையின் நிகழ்ச்சிகளுக்குத் தொடர்புடைய சில சடங்கு களைச் செய்யலாயினர். பயிர் செழிக்க, வேட்டை சிறக்க, மழை வேண்டும்பொழுது, துன்பம் நீங்க எனப் பல சடங்குகளைப் பாடி, ஆடினர். இச் சடங்குகள் நம்பிக்கைகள் மூலமே கலைகள் பிறக்கத் தொடங்கின. ஆடல், பாடல் என்பன கூட்டாகப் பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டி ருந்தன. இவ்வாறு பாடப்பட்ட இசை பின்னர் தனித்தன்மை பெற்றுக் கலையாக உருப்பெற்று வளரத் தொடங்கியது.

தொல்காப்பியம் பல்வேறு கலைகளைப் பற் றிய குறிப்புக்களைக் கொண்டுள்ளது. உல குக்கு ஞாயிறு போலத் தொல்காப்பியம், தமிழ் வாழ்வுக்கு ஓர்அறிவு ஞாயிறு. தொல்காப்பி யத்தை இசையிலக்கணக் கண் கொண்டு கூர்ந்து பார்த். தால் அதிலுள்ள இசை பற்றிய குறிப்புக்களைக் காணலாம். நூல் முழுவதிலும் ஆங்காங்கு இசை யிலக் கணத்தின் பல இனிய குறிப்புக்கள் உள்ளன.

தொல்காப்பியர் இசைத்தமிழைப் பிரித்து நீக்கி இயற்றமிழைத் தொகுத்துச் சொல்லும் போது இசையோடு தொடர்புடைய குறிப்புகளை இடையிடையே சுட்டிக்காட்டியுள்ளார். எ.கா. இசையிலக்கணப் பாட்டாகிய பண்ணத்தியை யும், வாரம் பாடுதலையும், நானிலங்கட்குரிய யாழ்களையும் கூறலாம். வல்லிசை, மெல்லிசை முதலிய வண்ணங்கள் பெரிதும் இசையிய லுக்கும் தொடர்புடையவை. மேலும் பாணர் களின் ஆடல், பாடல் பற்றிய குறிப்புக்கள் பல தொல்காப்பியச் செய்யுளியலில் உண்டு.

மோனை, எதுகை, இயைபு முதலிய தொடைகளின் இலக்கணம் இசைக் கீர்த் தனைகளுக்கும் இசைப்பாடல்களாகிய தாண் டகம், நேரிசை, விருத்தம் முதலியவற்றிற்கும் இன்றியமையாது வேண்டப்படுவன. இதனை முதன் முதலில் அறிமுகப்படுத்தியது தொல் காப்பியமாகும். இசைப் பாடலுக்குரிய யாப்பு வகைகளைத் தொல்காப்பியம் மிகவும் அழகாக வகுத்துக் காட்டியுள்ளது.

**தொல்காப்பியத்தின் வழியாய் அறியப்படும் இசைத் தலைப்புக்கள்**

1. நான்கு வகை நிலங்கட்குரிய பண்வகைகள்
2. பண்களுக்குரிய பெரும்பொழுதும் சிறு பொழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பண்களை வரிசைப்படுத்தி நிறுத்தியது.
4. நானிலப் பண்களுக்குரிய திறப்பண்கள்.
5. பண்ணத்திகள்
6. வாரம் பாடும்முறை
7. வண்ணங்களும் அவற்றின் வலி, மெலி முதலிய ஓசைகளும்.
8. யாப்பு வகைகட்குரிய அகவல் முதலிய ஓசைகள்.
9. பாடல் அமைப்புக்கு வேண்டிய மோனை. எதுகை, தொடை வகைகள்.
10. கலிப்பாவின் உறுப்புகள்
11. இசை எழுத்துக்களின் மாத்திரை அளவுகள்.
12. எழுத்து, அசை, சீர். தூக்கு
13. தாள நடைவகைகள்
14. பாணர் வாழ்வியல்

**1. நான்குவகை நிலங்கட்குரிய பண் வகைகள்**

முல்லை யாழ், குறிஞ்சி யாழ், மருத யாழ், நெய்தல் யாழ் ஆகியன பெரும் பண்களின் பெயர்களாகும். இவை தத்தம் நிலங்கட்குரியன. முல்லை யாழ், முல்லை நிலத்துக்குரியது. மலை நிலமாகிய குறிஞ்சிக்குரிய பெரும் பண் குறிஞ்சி யாழ். மருத யாழ் வயல் நிலமாகிய மருதத்திற் குரியது. நான்காவது நெய்தல் யாழ். இது கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலத்திற்குரிய பெரும் பண், இவை மிகத் தொன்மை தொட்டு வரும் பண்ணுப் பெயர்ப்பு நெறியால் இந்த வரிசையில் தொல்காப்பியர் நிறுத்திக் காட்டியுள்ளார். பண்ணுப் பெயர்ப்பு முறை சங்க இலக்கியங்களில் பத்து இடங்களுக்கும் மேலே குறிப்பிடப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.

எ—கா.

"முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"

(தொல். அகத்,[5])

**2. பண்களுக்குரிய பெரும் பொழுதும் சிறு பொழுதும்**

பெரும்பொழுது ஆறு

| | | |
|---|---|---|
| 1. கார் | – | ஆவணி, புரட்டாதி |
| 2. கூதிர் | – | ஐப்பசி, கார்த்திகை |
| 3. முன்பனி | – | மார்கழி, தை |
| 4. பின்பனி | – | மாசி, பங்குனி |
| 5. இளவேனில் | – | சித்திரை, வைகாசி |
| 6. முதுவேனில் | – | ஆனி, ஆடி |

| | யாழ் | பாலை | திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|---|---|---|
| 1. | முல்லை | செம்பாலை | இல்லிருத்தல் | கார் | மாலை |
| 2. | குறிஞ்சி | படுமலை | புணர்தல் | கூதிர் | நள்ளிரவு |
| 3. | மருதம் | கோடிப்பாலை | ஊடல் | இளவேனில் | விடியல் |
| 4. | நெய்தல் | விளரிப்பாலை | இரங்கல் | இளவேனில் | ஏற்பாடு |

**சிறுபொழுது ஆறும் பண்ணும்**

| | | |
|---|---|---|
| 1. வைகறை | – | 2–6 மணி மருதயாழ் |
| 2. காலை | – | 6–10 மணி முல்லையாழ் |
| 3. நண்பகல் | – | 10 – 2 மணி குரல்புணர் நல்யாழ் (அரும்பாலை) |
| 4. ஏற்பாடு | – | 2–6 மணி நெய்தல் யாழ் |
| 5. மாலை | – | 6–10 மணி நெய்தல்யாழ்முல்லையாழ் |
| 6. யாமம் | – | 10–2 மணி குறிஞ்சி யாழ் |

**3. பண்களை வரிசைப்படுத்தி நிறுத்தியது குறிஞ்சிப் பெரும்பண்**

குறிஞ்சிப் பெரும்பண் என்பது படுமலை யாகும். அது இன்றைய நடபைரவி ஆகும். இது பண்ணுப் பெயர்ப்பால் உறுதிப்படுத்தப்படுகிறது. தொல்காப்பியம், கருப்பொருள் கூறுகையில் குறித்துக்காட்டும் இரண்டாவது பண் குறிஞ்சி யாழ். இதனை, முதற் பண்ணின் துத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலாகக் கொண்டு பண்ணுப் பெயர்த்து உண்டாக்கினர்.

**முல்லையாழ்**

இது ஆதிமுதற் பண்ணாகும். இளங்கோ முல்லைப்பண் என்பது ஏழு நரம்புகள் உடையது என்றும், அது முல்லை நிலத்திற்கே உரிய தென்றும் கூறுகின்றார். தொல்காப்பியர் குறித்த முல்லையாழ் என்பது அவர்க்கு அடுத்த காலங் களில் செம்பாலை எனப் பெயர் பெற்றது.

**மருத யாழ்**

முல்லை யாழின் இழி குரலாகக் கிடைப்பது மருத யாழ், அவையாவன செம்பாலையின் (அரி காம்போதி) இழி குரலாகப் பண்ணுப் பெயர்த்த லால் கிடைப்பது கோடிப்பாலை எனச் சிலப்பதி காரமும் அதன் உரைகளும் காட்டுகின்றன.

**நெய்தல் யாழ்**

செம்பாலையின் விளரி குரலாகப் பண்ணுப் பெயர்த்தலால் கிடைக்கும் பாலை விளரிப் பாலை. இதனையே நெய்தல் யாழ் என்றனர். இந்த ஒரு பண் மட்டும் தெளிவாக விளரியில் குரலை நிறுத்திப் பண்ணுப் பெயர்க்கக் கிடைப் பது என்றும், அதனால் அது விளரிப்பாலை எனவும் சொல்லப்பட்டது. விளரிப்பாலையும் செவ்வழிப்பாலையும் நெய்தற்குரியனவே.

**4. நானிலப்பண்களுக்குரிய திறப்பண்கள்**

யாழின் பகுதி என்பது பெரும்பண்ணில் பிறக் கும் கிளைப்பண் என்று கூறப்படுகிறது. இத னையே நானிலப் பண்களுக்குரிய திறப்பண்கள் எனப்படுகிறது. முல்லை யாழுக்குக் கிளைப்பண் முல்லைத் தீம்பாணி ஆகும் என்றும், அதற்கு மறுபெயர் சாதாரி என்றும் கூறப்படுகிறது. சங்க காலத்தில் பெரிதும் வளர்ந்தோங்கியிருந்த பண்ணுப் பெயர்ப்பு முறையாதலால். அம்முறை மூலம் முல்லைத் தீம்பாணியினின்றுப் பண்ணுப் பெயர்த்து ஐந்து நிலப் பெரும் பண்ணுக்குமுரிய கிளைப் பண்களை அறிந்தனர் என்று சிலப் பதிகாரம் கூறுகிறது.

| | யாழ் | குரலாதல் | பண் | இராகம் |
|---|---|---|---|---|
| 1. | முல்லை | குரல்குரலாதல் | முல்லைத்தீம்பாணி | மோகனம் |
| 2. | குறிஞ்சி | துத்தம் " | செந்துருத்தி | மத்தியமாவதி |
| 3. | பாலை | கைக்கிளை" | இந்தளம் | மாயாமாளவகௌளை |
| 4. | மருதம் | இளி " | கொன்றையம்தீங்குழல் | சுத்தசாவேரி |
| 5. | நெய்தல் | விளரி " | தனாசி | சுத்த தன்யாசி |

**5. பண்ணத்திகள்**

பண்ணத்தி எனும் சொல் பண்ணையுடையது என்று பொருள்படும். பண்ணத்திற்குரிய சிறப் பான இசை ஓசைகளைப் பெற்றிருக்கும் சிறு பாடல் என்று பொருள்படுவது. பண்ணத்தியின் இலக்கணம் கூறும் தொல்காப்பியச் சூத்திரம்

"பாட்டிடைக் கலந்த பொருளவாகிப்
பாட்டின் இயல் பண்ணத்தி இயல்பே" [2]
(செய், 173)

பாடும் பாட்டினுடைய ஓசை இயல்புகளும் தன்மைகளும் பண்ணில்தான் உள்ளன. பண் ணின் தன்மைகள் பாட்டிற்குச் சுவையூட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. பண்ணின் தன்மைகளை அறிவிப்பதற்காக பாட்டானது இசையமைக்கப்பட்டு பாட்டின் சொற்களில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. எனவே தான் பண்ணமைக்கப்பட்ட பாட்டு பண்ணத்தி என்று பண்ணின் அடிப்படையிலேயே பெயர் பெற்றது.

**6. வாரம் பாடும் முறை**

தொல்காப்பியர் தன் நூலில் வாரம் பாடுதல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். வாரம் பாடுதல் என்பது குறைப்பு முறையில் பாடுதலைக் குறிக்கும். அதாவது ஒன்றாம் காலம், இரண்டாம் காலம் பாடுதல். இது இன்று வரையில் தொடர்ந்து இசைத்துறையில் நடைமுறையில் இருந்து வருகிறது.

**7. வண்ணங்கள்**

வண்ணங்கள் சந்த வேறுபாடுகளைக் குறிக்கும். இவை இருபது வகைப்படும் எனத் தொல்காப்பியர் கூறுகின்றார்.

"வண்ணந் தாமே நாலைந்து என்ப"[3]

(தொல், செய் – 204)

தொல்காப்பியர் 'வண்ணம் நூறும் பலவும் ஆகி வேறுபடினும் இவ்விருபதுள் அடங்கும்' என்றார். வண்ணங்களைப் பலவகையாக வகுக்கலாம். குறில் வண்ணம். நெடில் வண்ணம், குறில் நெடில் வண்ணம், முதலியன பாடல் ஓசையின் நீள அளவு பற்றியன. வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம். பாடல் ஓசைத் தன்மையன. அகைப்பு வண்ணம், உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் முதலியன பாடும் விரைவுக்காலம் பற்றியன. ஒருஉ வண்ணம்,. ஏந்தல் வண்ணம், தாஅ வண்ணம், பாசு வண்ணம் முதலியன பாக்களைத் தொடுக்கும் தொடைகளால் எழும் ஓசை பற்றியன.

வண்ணத்தைத் தொல்காப்பியர் சந்த வேறுபாடு என்று விளக்கியுள்ளார். இவ்விளக்கம் வண்ணம் என்னும் சொல்லுக்குரிய பொருளோடு இணைந்து அமையவில்லை. வண்ணம் எனும் சொல் நிறத்தைக் குறிக்கும். (வண்ணம் – வருணம்) வண்ணப் பாடல்களில் ஒலியின் நிறம் உண்டு. வண்ணங்களில் எழுந்தோடும் ஒலியின் ஒழுங்கு மிக்க இனியது. உணர்ச்சியூட்டுவது, ஆதலால் அதனை 'ஒலியின் நிறம்' (Tonal Colour) என்று விளக்கலாம். வண்ணம் என்பது சந்த வேறுபாட்டு ஒலியின் நிறம் என்று வரையறை கூறலாம்.

இவ்வண்ணங்கள் இருபது அவையாவன

1. பாஅ வண்ணம்
2. தாஅ வண்ணம்
3. வல்லிசை வண்ணம்
4. மெல்லிசை வண்ணம்
5. இயைபு வண்ணம்
6. அளபெடை வண்ணம்
7. நெடுஞ்சீர்வண்ணம்
8. குறுஞ்சீர் வண்ணம்
9. சித்திர வண்ணம்
10. நலிவு வண்ணம்
11. அகப்பாட்டு வண்ணம்
12. புறப்பாட்டு வண்ணம்
13. ஒழுகு வண்ணம்
14. ஒருஉ வண்ணம்
15. எண்ணு வண்ணம்
16. அகைப்பு வண்ணம்
17. தூங்கல் வண்ணம்
18. ஏந்தல் வண்ணம்
19. உருட்டு வண்ணம்
20. முடுகு வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. பாஅ வண்ணம்**

"அவற்றுள் பாஅ வண்ணம்
சொற் சீர்த் தாகி நூற்பாற்பயிலும்"[4]
(தொல். செய் – 206)

இந்நூற்பாவினுள் வரும் ஓசையைக் குறிப்பது, சொற் சீர்த்தாகி வரும் என்ற பாடல் அடியோடு தொடர்ந்தும் தொடராதும் வருவன. இசைக் குரித்தாகிய கவியுள்ளும் பரிபாடலுள்ளும் வரு மென்று தொல்காப்பியர் கூறுகிறார். பாஅ வண் ணம் என்பது நூற்பாவில் பெறப்படும் ஓசையைக் குறிக்கும்.

**2. தாஅ வண்ணம்**

தாஅ வண்ணம் இடையிட்டு வந்த எதுகைத் தாகும்.[5] (தொல். செய் –207) இதனைப் பொழிப்பு எதுகையாகவும், ஒரூஉ எதுகையாகவும் கூறு கிறார். ஒரூஉ வண்ணத்தைப் பின்னர்த் தொல் காப்பியரே கூறுவதால் கூறுவது கூறல் ஆவ தால். இவ்வுரை தொல்காப்பியர் கருத்தோடு பொருந்தவில்லை.

அடியிடையிட்டுவந்த எதுகையே தாஅ வண்ணமாகும் என்று கூறும் இளம்பூரணரின் கருத்தே ஏற்றதாகும். இசைப்பாடலில் பல்ல விக்கு எதுகையாக அடியிடையிட்டு அனுபல் லவி அமையும்.

எ–கா,

"செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"[6]

**3. வல்லிசை வண்ணம்**

"வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே"[7]
(தொல். செய் – 208)

எ–டு, "முட்டாட் தாமரைத் துஞ்சி"[8]
(திருமுருகு. 73)

வல்லிசை மிகுந்த திருப்புகழ் பாடல்கள்

"மைக்குக் கைப் புக்கக் கயல்விழி
யெற்றிக் கொட்டிட்டுச் சிலைமதன்
வர்க்கத்தைக் கற்பித்திடுகிற மொழியாலே"[9]
(1074)

**4. மெல்லிசை வண்ணம்**

"மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து
மிகுமே"[10] (தொல். செய் – 209)

எ–டு, "பொன்னி லங்கு பூங்கொடி பொலஞ்
செய்கோதை வில்லிட"[11] (சிலப். 29–20)

"சிங்கவரை மங்கையர்கள் தங்களன
செங்கைநிறை கொங்குமலத்தூய்"[12]
(தேவாரம் சம். 3–68–3)

"சந்தனம் கலந்த குங்கு
மம்புனைந்த ணிந்த கொள்கை
சந்தி ரந்த தும்பசைந்து
தெருவூடே"[13] (திருப்புகழ் – 1038)

**5. இயைபு வண்ணம்**

"இயைபு வண்ணம் இடையெழுத்து
மிகுமே"[14] (தொல். செய் – 210)

எ–டு "அரவினதிர வுரீஇய வரகு கதிரின்
கரியினுரிவை போர்த் தணங்காகிய
வரியினுரிவை மேகலை யாட்டி"[15]
(சிலப். 12: 61–62)

"போர் மிகுந்த வயற்றோணி புரத்துறையும்
புரிசடை யெங்"[16]
(தேவாரம் – சம்ப. 1:60:11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. அளபெடை வண்ணம்**

"அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்"[17] (தொல். செய் – 211)

கண்ண்ண் டண்ண் ணெனக் கண்டும் கேட் டும்"[18] (மலைப. 352)

இசைப்பாடல்களில் பண்ணின் தன்மையை உணர்த்துதற்கும், சுவைகளைக் காட்டுவதற்கும் தாள அளவினை நிறைப்பதற்கும் உயிரெழுத் துக்களும் மெய்யெழுத்துக்களும் நீண்டு ஒலிப் பது உண்டு. இது அளபெடையோடு ஒத்து நோக்குதற்குரியது.

**7. நெடுஞ்சீர் வண்ணம்**

"நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்"[19] (தொல். செய் – 212)

எ–கா

"மாவா ராதே மாவாராதே"[20] (புறம். 273)

"யாமாமா நீயாமா மாயாழீ காமாகா ணாகா"[21]

(தேவாரம் சம். 3 – 117. 1)

"கூசா தேபா ரேசா தேமால் கூறா நூல் களில்"[22] (திருப்புகழ், 830)

**8. குறுஞ்சீர் வண்ணம்**

"குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும்"[23] (தொல். செய் – 213)

"அரு நெறிய மறைவல்ல முனியகன் பொய்கை"[24] (சம்ப. 1–11)

"சுரமுமுளரியின் மலர்முக"[25]

(திருப்புகழ் 828)

**9. சித்திர வண்ணம்**

சித்திர வண்ணம் என்பது நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் சார்ந்து வருவது என்றார் தொல்காப்பியர்.

"சித்திர வண்ணம் நெடியவும் குறியவும்
நேர்ந்துடன் வருமே"[26] (தொல். 3:8:214)

எ–கா, "ஒரூர் வாழினும் சேரி வாரார்
சேரி வரினு மார முயங்கார்"[27]
(குறுந். 231)

சித்திர வண்ணம் நெடிய எழுத்துக்கள் ஒரு பாலும் குறிய எழுத்துக்கள் ஒருபாலும் என ஓரடி யில் வரப்பெறுவது.

**10. நலிவு வண்ணம்**

"நலிவு வண்ணம் ஆய்தம் பயிலும்"[28]

(தொல். செய் 215)

எ–கா "அஃகாமை செல்வத்திற் கியாதெனின்
வெஃகாமை"[29] (குறள். 178)

**11. அகப்பாட்டு வண்ணம்**

"அகப்பாட்டு வண்ணம்
முடியாத் தன்மையின் முடித்தன மேற்றே"[30]
(தொல். செய் 216)

உடுத்திக் காட்டாது இடையடி போன்று நிற்பது அகப்பாட்டு வண்ணம்.

எ–கா "உள்கண் சிவப்ப தெவன் கொலன் னாய்"[31] (ஐங். 21)

**21. புறப்பாட்டு வண்ணம்**

"புறப்பாட்டு வண்ணம்
முடிந்தது போன்று முடியாதாகும்"[32]
(தொல். செய். 217)

எ–டு, "இன்னா வைகல் வாரா முன்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்நீ நீ முன்னிய வினையே

முந்நீர் வரைப்பக முழுவதுடன் றுறந்தே"[33]

(புறம். 363)

உணர்ச்சி ததும்பக் கருத்தை வெளிப்படுத்தும் முறை தழுவியது இந்த வண்ணம்.

**13. ஒழுகு வண்ணம்**

"ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும்"[34]

(தொல். செய். 218)

எ–டு, "நன்னர் நெஞ்சம் நெகிழ்ந்த பின்றை"[35]

(குறுந். 176 : 3)

ஓசை நோக்கிப் பிற வண்ணங்களை ஒழுகு வண்ணம் எனல் பொருந்துமாயினும் அவற்றிற்கு வேறு இலக்கணம் உண்டு.

"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்"[36] (பாரதி) இப்பாடலில் இழுமென ஓசை ஒழுகுவதைக் காணலாம்.

**14. ஒரூஉ வண்ணம்**

"ஒரூஉ வண்ணம் ஒரீ இத் தொடுக்கும்"[37]

(தொல். செய். 219)

ஒரீஇ என்பது நீங்கி என்று பொருள்படும். எனவே நீங்கித் தொடுப்பது ஒரூஉ வண்ணம்.

எ–கா, "யானே யீண்டை யேனே யென்ன லனே"[38] (குறுந் 97)

"சிறியகட் பெறினே யெமக்கீ யுமன்னே"[39]

(புறம் 235)

**15. எண்ணு வண்ணம்**

"எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்"[40]

(தொல். செய் 220)

எ–கா, "நுதலுந் தோலு திதலை யல்குலும்

நிலம் நீர் வளி விசும்பு என்ற நான்கின்

அளப்பரியையயே"[41]

(பதிற்றுப். 14 : 1–12)

எனும் எண் வரிசைப் பாடலும் எண்ணுவண்ண மாகும். நாட்டுப் புறப்பாடல்களில் தண்ணீர் இறைப்போர் இறைத்த சாலை எண்ணுதற்கு எண்ணிக்கையிட்டுப் பாடும் ஏற்றப் பாட்டும் எண்ணு வண்ணமாகும்.

**16. அகைப்பு வண்ணம்**

"அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும்"[42] (தொல். செய். 221)

ஒரு பகுதி நெடில் எழுத்துக்களாகவும் ஒரு பகுதி குறில் எழுத்துக்களாகவும் இவ்வாறு விடுபட்டுச் சென்று சேருமாதலின் அது அகைப்பு வண்ணம் எனப் பெயர் பெற்றது.

எ–கா, "வாரா ராயினும் வரினும் அவர்நமக்

கியா ராகி யரோ தோழி"[43] (குறும்.110)

**17. தூங்கல் வண்ணம்**

"தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்"[44]

(தொல். செய் 222)

எ–கா, "யானுடத் தானுணர்த்த யானுணரா விட்டபின் றானுட யானுணர்த்தத தானுணர்ந் தான்"[45] (முத்தொள்ளாயிரம் 104)

சொல்:தூங்கல் – ஒரே முறையில் மாறாமல் இயங்குவது.

**18. ஏந்தல் வண்ணம்**

"ஏந்தல் வண்ணம்

சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்"[46] (தொல். செய் 223)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ–கா "வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்"[47]

(நாலடியார் 4 –9)

**19. உருட்டு வண்ணம்**

"உருட்டு வண்ணம் அராகம் தொடுக்கும்"[48]

(தொல். செய். 224)

"எரியுரு வுறழ விலவ மலர"[49] (கலி. 33)

"வேட்டுவரி – சிலப்பதிகாரம்"[50]

(சிலம்பு.12–20)

**20. முடுகு வண்ணம்**

"முடுகு வண்ணம்
அடியியந் தோடி யதனோ ரற்றே"[51]

(தொல். செ. 225)

எ–கா, "நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீ இத்தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவரினமாக வேய்புரை மென்றோட் பசலையுமம்பலும்"[52]

(கலி. 39) – 2வது குறஞ்சி

வண்ணங்களின் வழி மலர்ந்த பாடல்கள் தேவாரத்தில் ஏராளம் காணலாம். திருப்புகழ் முழுமையும் சந்தப் பாடல்களே.

**8. யாப்பு வகைகளுக்குரிய ஓசைகள்**

ஓசை என்பது இயல்துறைப் பாட்டில் காணப் படும் ஓசைகளையும் இசைத்துறைப் பாட்டில் காணப்படும் ஓசைகளையும் சுட்டுகின்றது. இது இயலைக் காட்டிலும் இசைக்குப் பெரிதும் தொடர்புடையது. இசைப்பாடல் ஓசைமயமானது. அளபிறந்து உயிர்த்தலும், ஒற்றிசை நீடலும். எனும் செயல்கள் இசைத்துறைக்கும் உரியன என்று தொல்காப்பியர் சுட்டுகின்றார். இங்கு 'உயிர்த்தல்' என்பது உயிர் எழுத்து நீண்டு ஒலித் தல் எனப் பொருள்படுவது. மெய்யெழுத்துக்கள் இசைத்துறையில் வேண்டிய அளவுக்கு நீண்டு ஒலிக்கும். அவ்வாறு நீளுவதை மெய்க் குறியீடு களால் குறித்து எழுதிக்காட்டி ஒற்றிசை நீடல் என்றனர்.

**9. பாடல் அமைப்புக்கு வேண்டிய எதுகை, மோனை தொடை வகைகள்**

இதற்கு எட்டுத் தொகையிலும் பத்துப் பாட்டிலும் எடுத்துக்காட்டுக்கள் ஏராளமாய் உள்ளது. இவற்றின் வழியாக இன்றைய கீர்த் தனைகளில் காணப்படும் மோனை, எதுகை, இயைபு முதலிய தொடை வகைகளை இனம் கண்டு கொள்ளலாம்.

**10. கலிப்பாவின் உறுப்புக்கள்**

தொல்காப்பியம் இசைப்பாடல்களாகிய கலிப் பாடல்களையும், பரிபாடல்களையும் விளக்கி யுள்ளது. இவ் இருவகைப் பாடல்களினுள்ளே நாலடி வெண்பாவும், குறள் வெண்பாவும் பெரிதும் இடம்பெறுகின்றன. வெண்பாவின் யாப்புவழி தோன்றியனவே கலிப்பாவும் பரி பாடலும்.

**11. இசை எழுத்துக்களின் மாத்திரை அளவுகள்**

இயற்கையாகக் கண்ணிமைக்கும் நேரம் அல்லது கைநொடிக்கும் நேரத்தை ஒரு மாத் திரைப் பொழுது அல்லது கைநொடிப்பொழுது என்று தொல்காப்பியர் கூறுகின்றார். நடு விரலையும் பெருவிரலையும் சேர்த்து அழுத்தி விட்டு நொடிக்கும் போது எழுகின்ற ஓசையே ஒரு நொடிப்பொழுது. இதனை இசைத் துறைக் கணக்கு முறையில் (மாத்திரை) கால் எண் ணிக்கை என்று கூறுவது பொருத்தமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12. எழுத்து, அசை, சீர், தூக்கு**

இசைக்கு எலும்புச் சட்டகம் போன்றது காலக் கணிதம். அதன் மேலேதான் இசைக் கோவைகள் எனும் தசையும் நரம்பும் கட்டப்படு கின்றன. இசையின் காலப்பகுப்பைத் தாய் என்றும், இசைக் கோவைகள் அமைப்பைத் தந்தை என்றும் பாடல்களைச் சேய் என்றும் கூறலாம்.

ஓரளவு இசைக்கும் எழுத்துக்கள் குற்றெழுத் துக்கள் என்றும்,

ஈரளவு இசைக்கும் எழுத்துக்கள் நெட் டெழுத்துக்கள் என்றும் இரண்டு பெரும் பிரி வாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

"அசையும் சீரும் இசையோடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தலும் வல்லோராறே"53
(தொல். செய். 10)

அசை எனும் இசைக்காலப் பகுப்பு

| **நேரசை** | **எழுத்து** |
|---|---|
| குறில் குறிலொற்று | அ.அல் |
| நெடில் நெடிலொற்று | ஆ.ஆல் |

| **சொற்கட்டு** | **தாளவாய்ப்பாடு** |
|---|---|
| த.நம் | ஓரளவு |
| தா.தாம் | ஈரளவு |

| **நிரையசை** | **எழுத்து** |
|---|---|
| குறிவினை | பல |
| குறிவினை ஏற்று | பலம் |
| குறில் நெடில் | பலா |
| குறில் நெடில் ஒற்று | பலாம் |

| **சொறிகட்டு** | **தாளவாய்ப்பாடு** |
|---|---|
| ததி | ஈரளவு |
| ததிம் | |
| ததீ | மூவளவு |
| ததீம் | |

**சீர் எனும் இசைக்காலப் பகுப்பு**

சீர் என்பது சொற்றொடரைக் காலக் கணக் குப்படி பிரித்த பிரிவு. இப்பிரிவு இரண்டசை சேர்ந்த சீர் என்றும் மூன்றசை சேர்ந்த சீர் என் றும் இருவகைப்படும்.

"ஈரசை கொண்டும் மூவசை புணர்த்தும்
சீரியைந் திற்றது சீரெனப் படுமே"[54]
(தொல். செய் 11)

ஈரசைச் சீர்களின் இசைக்கால அமைப்பு

**சீர் இன்றுள்ள தாளவாய்ப்பாடும் கால அளவும்**

| | |
|---|---|
| நேர் நேர் | தாதீ தீம் = 2, தத். திமி=2 |
| | தா – ஈரளவு, த – ஓரளவு |
| நேர் நிரை | தாங்கிட = 1, தத்ததீம் =1 |
| நிரை நேர் | தீகா தோம் =1 1/4, ததீம் தோம்=11/4 |
| நிரை நேர் | தகதின = 1, கிடத்தக = 1, |

தூக்கு ; சீர்கள் சேர்ந்தது தூக்கு எனப்படும்

1. சீர் – செந்தூக்கு
2. சீர் – மதலைத் தூக்கு
3. சீர் – துணிபுத் தூக்கு
4. சீர் – கோயில் தூக்கு
5. சீர் – நிவப்புத் தூக்கு
6. சீர் – கழால் தூக்கு
7. சீர் – நெடில் தூக்கு

**செந்தூக்கு:**

இது முதலாவது அடிப்படைத் தாள அளவு. ஆதலால் செம்மைத் தூக்கு எனும் பொருளில் செந்தூக்கு எனப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதலைத்தூக்கு:**

மதலை – குழந்தை. குழந்தை போன்று சிறிய தாள உருவம் பெறுவதால் மதலைத் தூக்கு எனப்பட்டது.

**துணிபு:**

துணிபு – துண்டிக்கப்பட்டது. ஒன்றை இரண்டாகத் துண்டிக்க மூன்று பகுதிகள் கிட்டும். எனவே முச்சீர் கொண்டது துணிபுத் தூக்காகும்.

**கோயில்:**

அளவுகளுள் 4 எண்ணிக்கை மிகச் சிறந்தது. உயர்வுத் தன்மை காரணமாகக் கோயில் தூக்கு எனப்பட்டது.

**நிவப்பு:**

நல்ல அடிப்படை அளவாகிய நாற்சீர் கொண்ட கோயில் தூக்கிலும் சற்று உயர்ந்தது. நிவப்பு – உயர்வு

**கழால்:**

கழல் என்பது காலில் அணியும் சிலம்பு. இதற்கு ஆறு பக்கங்கள் உண்டு. இது கருதி அறுசீர் தூக்கு கழால் தூக்கு எனப்பட்டது.

**நெடும் தூக்கு:**

எல்லாத் தூக்குகளைக் காட்டிலும் நெடுந் தூக்கு நீண்டமையால் இப்பெயர் பெற்றது.

**13. தாளநடை வகைகள்**

எழுத்துக்களைக் குறில், நெடில் எனப் பகுத்தமைத்து அலை ஒலிக்கும் காலக் கணக்கினைத் தொல்காப்பியம் கூறுகிறது. பாடலில் சில எழுத்துக்களை நீட்டி ஒலித்தலையும் சில எழுத்துக்களை குறுகி ஒலித்தலையும் பற்றி விளக்குகிறது. எழுத்து. சீர். அசை, தூக்கு முதலிய அமைப்புக்கள் தாளக் கால அளவு கொண்டவை. நாற்சீர்கள் கொண்ட அடி, மூன்று சீர்கள் கொண்ட அடி, முதலிய அடிகளால் செய்யுள்கள் ஆக்கப்படுவதை விளக்குகிறது. நடை மிகுத்து ஏத்தும் குடை நிழல் மரபு (தொல். புறம். 36) எனும் சூத்திரத்தின் பொருளுக்கு ஏற்ப பண்டைக் காலத்தில் நாலெழுத்து நடைச் சொற்கட்டு, மூவெழுத்து நடைச் சொற்கட்டு முதலிய வகைகளைத் தொல்காப்பியம் சுட்டிக் காட்டியுள்ளது.

# அடிக்குறிப்புக்கள்


1. சுப்பிரமணியன், ச. வே; 1998, **தொல்காப்பியம்.** மணிவாசகர் பதிப்பகம். சென்னை.ப. 356.
2. திரு. அடிகளாசிரியர், **தொல்காப்பியம், பொருளதிகாரம்.** தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு. தஞ்சாவூர். 1985, ப. 325.
3. மே.கு, ப. 385
4. மே.கு, ப. 387
5. மே.கு, ப. 389
6. குருசாமி, ம.ரா.போ; 1987, **பாரதி பாடல்கள் ஆய்வுப் பதிப்பு,** தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு. தஞ்சாவூர். ப. 521.
7. மு.கூ. நூல், 1985, அடிகளாசிரியர், ப. 391.
8. சாமிநாதையர், டாக்டர் உ.வே; 1986, **பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்.** தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு. ப. 10.
9. குருநமசிவாயன், ஜெ.மு; 1974, **அருணகிரிநாதர் திருப்புகழும் மற்ற நூல்களும்.** மதுரை. ப. 721.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மு.கூ.நூல்.அடிகளாசிரியர். 1985, ப. 391.
11. சாமிநாதையர், டாக்டர் உ.வே; 1978, சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையும். உ.வே.சா.நூல் நிலைய வெளியீடு ப. 575.
12. சுப்பிரமணியபிள்ளை K. ; 1980, திருஞானசம்பந்தர் சுவாமிகள் அருளிச் செய்த தேவாரப் பதிகங்கள். ஸ்ரீ வைகுண்டம், திருச்செந்தூர். ப. 723.
13. மு. கூ. நூ, குருநமசிவாயன் ஜெ.மு. .1974, ப. 697.
14. மு. கூ. நூ அடிகளாசிரியர் .1985, ப. 393
15. மு. கூ. நூ சாமிநாதையர், டாக்டர் உ.வே. 1978, ப. 313
16. மு. கூ. நூ சுப்பிரமணியபிள்ளை K 1980, ப. 71
17. மு. கூ. நூ அடிகளாசிரியர், 1985, ப. 394
18. மு. கூ. நூ, சாமிநாதையர், டாக்டர் உ.வே. 1986, ப. 587
19. மு. கூ. நூ, அடிகளாசிரியர், 1985 ,1985, ப. 395
20. லேனா தமிழ்வாணன்; 1987, புறநானூறு மூலம் (பாகம் 2) தெளிவுரை, மணி மேகலைப் பிரசுரம், ப. 78.
21. மு. கூ. நூ சுப்பிரமணியபிள்ளை, K 1980, ப. 117
22. மு. கூ. நூ குருநமசிவாயன் ஜெ.மு. .1974, ப. 557
23. மு. கூ. நூ அடிகளாசிரியர் 1985,ப. 396
24. மு. கூ. நூ, சுப்பிரமணியபிள்ளை K 1980, ப. 37
25. மு. கூ. நூ, குருநமசிவாயன், ஜெ.மு. 1974,ப 556
26. மு. கூ. நூ, அடிகளாசிரியர், 1985, ப. 397
27. சாமிநாதையர், டாக்டர் உ.வே; 1985, குறுந்தொகை. அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு. 1983, ப. 478
28. மு. கூ. நூ, அடிகளாசிரியர். ப. 398
29. வடிவேலு செட்டியார், கோ; 1972, திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும். மதுரைப் பல்கலைக்கழகம். ப. 176
30. மு. கூ. நூ, அடிகளாசிரியர், 1985, ப. 400
31. ஆசிரியர் குழு; 1981, ஐங்குறுநூறு, நியூ செஞ்சரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட். சென்னை. ப. 11
32. மு. கூ. நூ, அடிகளாசிரியர், 1985, ப. 401.
33. மு. கூ. நூ, லேனா தமிழ்வாணன், 1987, ப. 167.
34. மு. கூ. நூ, அடிகளாசிரியர், 1985,ப. 402
35. மு. கூ. நூ, சாமிநாதையர் டாக்டர் உ.வே. 1983,ப 369
36. குருசாமி ம.ரா.போ; 1985, பாரதிபாடல்கள். ஆய்வுப் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு. 1987, ப. 50
37. மு. கூ. நூ, அடிகளாசிரியர், ப. 404
38. மு. கூ. நூ, சாமிநாதையர் டாக்டர் உ.வே. .1983, ப. 218
39. மு. கூ. நூ, லேனா தமிழ்வாணன் 1987,ப. 167
40. மு. கூ. நூ, அடிகளாசிரியர், 1985, ப. 406
41. சாமிநாதையர் டாக்டர் உ.வே: 1985, பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும். 1980,ப. 12.
42. மு. கூ. நூ, அடிகளாசிரியர், ப. 407
43. மு. கூ. நூ, சாமிநாதையர் டாக்டர் உ.வே. 1983,ப. 243
44. மு. கூ. நூ, அடிகளாசிரியர் , 1985, ப. 409
45. முத்துக்கணேசன், ரெ; 1965, முத்தொள்ளாயிரம். மாருதி பிரஸ், சென்னை, ப.138
46. மு. கூ. நூ, அடிகளாசிரியர், 1985, ப. 409
47. சாமி சிதம்பரனார்; 1963, நாலடியார் (பாட்டும் உரையும்). தமிழ் புத்தகாலயம், ப, 31
48. மு. கூ. நூ,அடிகளாசிரியர் 1985, ப. 410
49. அனந்தராமையர், இ, வை; 1984, கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியர் உரையும். பதிப்புத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு ப. 180
50. மு. கூ. நூ, சாமிநாதையர், டாக்டர் உ.வே. 1978, பக். 310, 311
51. மு. கூ. நூ, அடிகளாசிரியர் 1985, ப. 412
52. மு. கூ. நூ, அனந்தராமையர் இ.வை. 1984, ப. 226
53. மு. கூ. நூ,அடிகளாசிரியர் 985, ப. 22.
54. மேலது ப. 24.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org